

# தண்ணீர் பம்புகளை தேர்வு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை



## நீர் வெளியேற்ற வீதம் (Pump Discharge):

நேரத்தைப் பொருத்து, பம்பிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு ஆகும். பொதுவாக, லிட்டர் / வினாடி (lps) என குறிப்பிடப்படும். குறைவான நேரத்தில் அதிக நீரை இறைப்பதற்கு, நீர் வெளியேற்ற வீதம் அதிகமுள்ள பம்பினைத் தேர்வு செய்ய வேண்டும்.





## அதிகபட்ச உந்துயரம் (Maximum Head):

எவ்வளவு ஆழத்திலிருந்து, நீரை இறைக்க இயலும் என்பதைக் குறிப்பதாகும். பொதுவாக நீர் இறைக்கப்பட வேண்டிய ஆழத்தை விட சற்று அதிகமாக இருப்பது நல்லது.

## பம்பின் திறன்:

தேவைப்படும் நீர் வெளியேற்ற வீதம் மற்றும் அதிகபட்ச உந்துயரம் ஆகியவற்றை கொண்டு தேவையான பம்பின் திறனை தீர்மானிக்க வேண்டும். இது குதிரைத்திறனில் (HP) குறிப்பிடப்படும்.





## நுழைவு குழாய் அளவு (Inlet Pipe size) :

நுழைவு குழாய் அளவு பெரியதாக உள்ள பம்பினை தேர்வு செய்ய வேண்டும். ஏனெனில், அதன் அளவு குறைவாக இருந்தால், பம்பின் திறன் அதிகமாக இருந்தால்கூட வெளியேற்றப்படும் நீரின் அளவில் தொய்வு காணப்படும்.

## BEE ஸ்டார் லேபல்:

அதிக ஸ்டார் ரேட்டிங் கொண்ட பம்புகள் மின்சாரத்தை சிக்கனப்படுத்தும்.




## நினைவில் கொள்க:

- தேவைக்கு அதிகமாக நிலத்தடி நீரை இறைத்தலைத் தவிர்க்க வேண்டும்
- தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்
- நம்மால் இயன்ற அளவிற்கு நீர் மேலாண்மை முறைகளைக் கடைபிடிக்க வேண்டும்

**சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (சி.ஏ.ஜி.)**

புதிய எண் 246, பழைய எண் 277-B, டி.டி.கே ரோடு, (ஜெ.ஜெ. ரோடு), ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

தொலைபேசி 91-44-2466 0387/2499 4458